சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 19.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **30/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | பார்த்தீபன் |
| தந்தை பெயர் | : | பவுன்ராஜ் |
| கிராமம் | : | காவனூர் |
| தாலுக்கா | : | குடவாசல் |
| தொழில் | : | தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். |
| வயது | : | 33 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

## முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 நாகப்பனை தெரியும்.

ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 09.00 மணியளவில் காவனூரில் உள்ள மதகு அருகில் கூட்டமாக இருந்தது. குடவாசல் போலீசார் வந்து பிரச்சனை என்றும், அதனால் வரைபடம் வரைய வந்துள்ளார்கள் எனவும், என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடைய கையொப்பம் ஆகும். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வை மகஜரில் நானும், அ.சா.6 ஆன நாகசெல்வம் என்பவரும் கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.19 16:52:27 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.